2008 ஏப்ரல் 23]

அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகச் செய்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எல்லாம் கேட்கவில்லை என்று சொன்னாலும், நாங்களே நம்முடைய மாண்புமிகு முதல்வருடைய உத்தரவின் பேரில் துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வலுவிழந்த பாலங்கள், குறுகிய பாலங்கள், பாலங்களே இல்லாத இடங்கள் என்று 3 வகைப்பாடுகள் செய்யப்பட்டு, ஏறத்தாழ 1,000 கோடி ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசினுடைய கவனத்திலே இருக்கிறது. அது பகுதி, பகுதியாக நபார்டு வங்கியினுடைய ஒத்துழைப்போடு எதிர்காலத்திலே இதுபோன்ற பாலங்கள் நிறைவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 150, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

150—

கால்நடை மருத்துவர்

***23949—திரு. மு.க. பெரியசாமி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, நல்லாடை ஊராட்சியிலுள்ள கால்நடை மருத்துவமனைக்கு, நிரந்தரக் கால்நடை மருத்துவரை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம் பூம்புகார் தொகுதியில் அமைந்துள்ள நல்லாடை ஊராட்சியில், கால்நடைக் கிளை நிலையம்தான் செயல்பட்டு வருகிறது. அதில் கால்நடை ஆய்வாளர் பதவி காலியாக உள்ளதால், திரு. சுப்பிரமணியம் என்ற கால்நடை ஆய்வாளர் அவர்கள் தற்சமயம் கூடுதல் பொறுப்பில் சிகிச்சை அளித்து வருகிறார்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2008 ஏப்ரல் 23

முற்பகல் 10-25

தமிழக முதலமைச்சர் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களின் உத்தரவுப்படி, 110 கால்நடை ஆய்வாளர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். பயிற்சி முடிவு பெற்றதும் மேற்படி கிளை நிலையத்திற்கு கால்நடை ஆய்வாளரை நிரந்தரமாகப் பணியமர்த்த இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லாடை என்பது 5 ஊராட்சிகளை உள்ளடக்கிய ஒரு மையப் பகுதி. அங்கு தினந்தோறும் 30 கால்நடைகள் கருவூட்டலுக்கும், 75-லிருந்து 100 கால்நடைகள் மருத்துவத்திற்கும் வருகின்றன. இந்தப் பகுதியிலே நல்லாடை, தலச்சங்காடு, திருக்கடையூர், திருவெண்காடு போன்ற பகுதிகளுக்கு ஒரே ஒரு மருத்துவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் வாரம் ஒரு முறை அங்கு வருவார். ஆனால், அவரும் இப்போது வருவதில்லை. அங்கே ஒரு தனியார் கால்நடை மருத்துவர் சிறப்பாகக் கால்நடைகளுக்கு வைத்தியம் செய்து வந்தார். அவரையும் இப்போது நமது மருத்துவர்கள் அகற்றிவிட்டார்கள். அந்தப் பகுதியிலே இப்போது கால்நடைகளுக்கான மருத்துவம் நடைபெறுவதேயில்லை. ஆகவே, அந்தப் பகுதியில் பால் வளம் மற்றும் இறைச்சிக்காக வளர்க்கப்படுகின்ற ஆடுகள் போன்ற அனைத்துக் கால்நடைகளுக்கும் வைத்தியம் செய்ய அங்கு நிரந்தரமாக ஒரு மருத்துவரை நியமிக்க அரசு முன்வருமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் கூறுவது உண்மையான நிலைதான். ஏனென்றால், கடந்த அ.தி.மு.க. ஆட்சியாளர்களால் 5 ஆண்டுகாலம் பணி நியமனம் தடை செய்யப்பட்டிருந்ததால், சுமார் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடை ஆய்வாளர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. ஆனால், 11 மாத பயிற்சியை முடித்த பிறகுதான், அவர்கள் பணியில் சேர இயலும். இப்போது பயிற்சி நடைபெற்று வருகிறது. தமிழக முதலமைச்சர் நான்காவது முறையாக முதலமைச்சராக இருந்தபோது, 2001-ல் கால்நடை ஆய்வாளர்கள்

2008 ஏப்ரல் 23]

பணியில் அமர்த்தப்பட்டார்கள். அதற்குப் பிறகு, 6 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் கருணை அடிப்படையில் முதற்கட்டமாக 110 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி நடைபெற்று வருகிறது. பயிற்சி முடிவுபெற்றதும் நிச்சயமாக மேற்படி கிளை நிலையத்தில் கால்நடை ஆய்வாளர் நிரந்தரமாகப் பணியமர்த்தப்படுவார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி பல்வேறு இடங்களிலே அந்தப் பணிகள் நடைபெறமுடியாமல் இருக்கின்றன. நமது மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் வருமுன் காப்போம் திட்டம் என்ற ஒரு திட்டத்தை நமக்குக் கொடுத்து அது மக்களிடத்திலே மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. ஆக, அப்படி கால்நடைகளுக்கும் வருமுன் காப்போம் திட்டம் அந்தந்தப் பகுதி கால்நடை மருத்துவ நிலையங்களில் நடத்தப்படுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட அந்தக் கால்நடை பாதுகாப்புத் திட்டம் முறைப்படி அனைத்துப் பகுதிகளிலும், அனைத்து ஒன்றியங்களிலும் மாதத்திற்கு ஒரு முகாம்வீதம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு தொகுதியிலும் எந்தெந்தப் பகுதியில் நடைபெறுகின்றன என்ற தகவலை அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு உத்தரவிட்டுள்ளது. ஆகவே, நிச்சயமாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினருக்கு அந்த விவரங்கள் தெரியாமல் இருந்தால் அதுகுறித்து துறை அலுவலர்களுக்கு அரசு உத்தரவிட்டு நடவடிக்கை எடுக்கும். இத்திட்டம் நல்ல முறையில், சிறந்த முறையில் நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)